அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல.6/96

எனது இல. 11/2/9/361/10(எச்)
அரசாங்க நிருவாக,உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில்,பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு 7
1996.03.01.

செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவருக்கும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடுகளை சமர்ப்பித்தல்,அம்முறையீடுகளை விசாரணை செய்தல் மற்றும் கட்டளையிடுதல்.

தாபன விதிக்கோவையின் தொகுப்பு 11 இன் அத்தியாயம் XLVIII பின்வருமாறு திருத்துவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

(1) தற்போது உள்ள 17:4 ஆம் பிரிவு முழுமையாக நீக்கப்படுவதுடன் பின்வரும் பந்திகள் புதிய 17:4 ஆம் பிரிவாக செயற்படுத்தப்பட வேண்டும்.

17:4 அரசாங்க சேவை ஆணைக்குழு அல்லது அதன் ஏதேனும் ஒரு குழுவினால் தன் அதிகாரமளிக்கப்பட்டுள்ள அரச உத்தியோகத்தர் ஒருவரால் ஒழுக்காற்று நடவடிக்கை சம்பந்தமாக இடப்பட்ட இடமாற்றக் கட்டளை,சேவை நீக்கம் அல்லது வேறேதேனும் ஒரு கட்டளை தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு ஒரு மேன்முறையீடு சமர்ப்பிக்கும் உரித்து கேடு விளைந்த உத்தியோகத்தருக்கு உண்டு.

17:4:1 ஒழுக்காற்று அதிகாரியின் கட்டளை கிடைக்கப் பெற்று 03 மாதங்களுக்குள் மேற்படி மேன்முறையீட்டை அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு எழுத்து மூலம் சமர்ப்பிக்க வேண்டும். தாமதம் தொடர்பில் நியாயமான காரணங்கள் இருந்தால் 03 மாதங்கள் பின்பாகவும் 06 மாதங்களுக்கு முன்பாகவும் கிடைக்கும் மேன்முறையீடுகளை கவனத்திற் கொண்டு பார்க்க அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு முடியும்.

..2

17:4:2 ஏதேனும் ஒரு மேன்முறையீடு பற்றி தெளிவுபடுத்தலுக்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவால் எவரேனும் ஒரு நபர் அழைக்கப்படும் சந்தர்ப்பத்தில் குறித்த தெளிவுபடுத்தல் ஆரம்ப விசாரணையின் சாட்சிகளுக்கு பாதிப்பாக இருக்கும் என்று தெரியவந்தால், ஏதேனும் கருத்து விளக்கத்தினால் பாதிப்புற்ற நபருக்கும் அதே போன்ற ஒரு சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.

17:4:3 மேன்முறையீட்டுக்காரர் மேலும் சேவையில் ஈடுபட்டிருக்கா விடின் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானம் நேரடியாக மேன்முறையீட்டுக்காரருக்கு அறிவிக்கப்பட வேண்டியதுடன் அவர் சேவையில் இருப்பின் திணைக்களத் தலைவரூடாக அறிவிக்க வேண்டும். அவ் இரு சந்தர்ப்பங்களிலும் எடுக்கும் தீர்மானத்தின் ஒரு பிரதி சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவரிடம் அனுப்ப வேண்டும்.

17:4:4 மேன் முறையீடொன்று பற்றி அறிக்கையிடும் போது மேன்முறையீட்டில் செய்யப்பட்டுள்ள கூற்றுக்கள் தொடர்பான ஆய்வுகளையும் ஒழுக்காற்று அதிகாரி சமர்ப்பிக்க வேண்டும். இதில் 111 ஆம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு அவ் ஆய்வுகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

17:4:5 அரசாங்க சேவை ஆணைக்குழு அல்லது அதன் குழுவொன்றினால் ஒரு தீர்மானம் வழங்கப்பட்டதன் பின் அது தொடர்பில் மேலும் மேன்முறையீடு செய்ய வேண்டியிருப்பின் அது அமைச்சரவையிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழு அல்லது அதன் குழு தங்களின் தீர்மானத்திற்கு எதிராக சமர்ப்பிக்கப்படும். மேன்முறையீட்டினை விசாரணைக்காக ஏற்றுக் கொள்ளுதலாகாது. விசேடமாக பழைய தீர்மானத்தின் சிறு குறைகளை சரிப்படுத்துவதற்காக மட்டும் குழுவின் தற்றுணிவுகளை பயன்படுத்த வேண்டும். ஏனைய மேன்முறையீடுகளை கவனத்திற் கொண்டு பார்ப்பதற்காக அமைச்சரவைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

02. அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் வெளியிடப்படுகின்ற குற்றப் பத்திரங்கள் தொடர்பிலான ஒழுக்காற்று விசாரணைகளின் போது முறைப்பாடு தரப்பில் நியமிக்கப்படுகின்ற உத்தியோகத்தர்களினால் முறைப்பாட்டை வழி நடாத்தும் தமது கருமங்களுக்கு மேலதிகமாக செயற்படுத்த வேண்டிய பின்வரும் கட்டளைகள் அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் வெளியிடப்பட்டுள்ளது.

(1) ஒவ்வொரு முறைப்பாடும் தோன்றுமாறு சாட்சிக்காரர்களின் வாய்மொழி மூல சாட்சிகளையும் பதிவு செய்யப்பட்ட சாட்சிகளையும் காலத்துக்கேற்றவாறு ஒழுங்குமுறைப்படுத்தி நடாத்திச் செல்ல வேண்டும்.

(11) ஒழுக்காற்று விசாரணை முடிவடைந்த திகதி தொடக்கம் 21 நாட்களுக்குள் முறைப்பாடு தரப்பில் எழுத்து மூல சாட்சிச் சுருக்கத்தினை விசாரணை அதிகாரியிடம் சமர்ப்பிப்பதற்குப் பொறுப்பாக இருக்க வேண்டும். ஒவ்வொரு முறைப்பாடும் நிரூபிக்கப்படுகிறதென்று சுட்டிக் காட்டி அந்தந்த முறைப்பாடு பற்றி வாய்மூலமாகவும், எழுத்து மூலமாகவும் சாட்சியங்கள் அவ்அறிக்கையில் வெவ்வேறாக குறிப்பிடுதல் வேண்டும.

(111) மேற்காட்டிவாறு தன் சாட்சிச் சுருக்கம் அனுப்பப்படுமென்று முறைப்பாட்டை வழி நடாத்தும் உத்தியோகத்தர் விசாரணை முடிவடைந்த பின் உடனடியாக விசாரணை உத்தியோகத்தருக்கு அறிவிக்க வேண்டும்.

ஒப்பம்: ஆர். எஸ். ஜயரத்ன,
செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில் [illegible]